# தோரணம் Thoranam

நன்றே செய்! இன்றே செய்!!

SMS(UK)Today | மாத e – செய்தி ஏடு | Monthly e-Newslett

. ஓலை –2 | சித்திரை—2017 | இதழ் - 15





சைவ முன்னேற்றச சங்க ஸ்ரீ சிவகாமி சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற திருக்கல்யாண உற்சவ நிகழ்வுகளை வீடியோ பதிவாக இரண்டாம் பக்கத்தில் **u tube** ஐ அழுத்துவதன் மூலம் பார்க்கலாம்

**பிரித்தானிய சைவ திருக்கோயில்கள் ஒன்றியத்தின் சைவ மகாநாடு எதிர்வரும் மே மாதம் 6ம் 7ம் ( 6th & 7th of May2017) திகதிகளில் நடைபெறவிருக்கிறது.**


ஆசிரியர் - வை.சிவனருட்செல்வர் | வடிவமைப்பு - சோ.நிரஞ்சன்



**அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத**

**சிதம்பரேஸ்வரர் ஆலயம்**

# திருக்கல்யாண உற்சவம்

## 26-03-2017

அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேதசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற திருக்கல்யாண உற்சவ நிகழ்வுகளை U-tube ஐ அழுத்துவதன் மூலம் காணலாம்.

**சைவ முன்னேற்றச் சங்கத்தில் நடைபெற்ற அன்னையர் தின நிகழ்வில்**



**தாய்க்கு முதலிடம் கொடுப்பதில் என்றுமே தமிழன் பின்னிற்பதில்லை**

**அம்மா என்பது நாங்கள் சொல்லும் முதல் வார்த்தை!**

**அம்மையே அப்பா என்கிறோம்!**

**மாதா பிதா குரு தெய்வம் என்கிறோம்!**

**அன்பு கருணை இவைகளைத் தந்தவள் அவள்!**

**இன்னும் சுருக்கமாச் சொல்லப்போனால் அன்னை என்பவள் ஒரு தியாகி!**

**A mother is one to whom you hurry when you are troubled.** -Emily Dickinson

**A mother's arm are made of tenderness**
**and children sleep soundly in them .** –Victor Hugo










**கடந்த வாரங்களில் பெரியபுராண நாயன்மார்களைப் பற்றிய சொற்பொழிவவுகளை ஆற்றிய திரு.தர்ம.இரவீந்திரமோகனையும் அடுத்து திரு்.தம்பு அவர்களையும் அடுத்து புலவர் திரு. வேணுகோகபாலையும். கலேயுள்ள படத்திலும் கீழேயுள்ள படத்தில் திருமதி இரத்தினராஜா அவகைளையும், திருமதி சாந்தா இரவீந்திரதாஸ் அவர்களையும் காணுகிறீர்கள்.**









**பெரியபுராணச் சொற்பொழிவின் தொடர்ச்சியாக கலிக்கம்ப நாயனார் பற்றி திரு.தர்ம.ரவீந்திரமோகன் அவர்கள் உரையை u-tube அழுத்துவதன் மூலம் கேட்கலாம்.**

# ஓம் நமச்சிவாய சிவாயநம ஓம்

**அருவமாகி உருவமாகி அருவுருவமாகி இருப்பவனே அவன்! அதுவே எம் சமயத்தவரின் பரம்பொருள். யாதுமாகி நின்றான் அவன்.**

ஓம் நமசிவாய




சிவாயநமஓம்




11-03-2017

**நடேசர் அபிஷேகம்**

11-03-2017 அன்று நடைபெற்ற ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற நடேசர் அபிஷேகத்தின்போது எடுக்கப்பட்ட படம்

**சிவாய நம என சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஏதுமில்லை**

ஆலய சிவாசாரியாரிடம் ஒரு சிவபக்தர் குடும்பம் பஞ்சகவ்ய கிண்ணங்கள் கையளிப்பதை அருகேயுள்ள படத்தில் காண்கிறீர்கள்.




NO ONE IS ANYONE'S FRIEND

NO ONE IS ANYONE'S ENEMY

# சங்க, ஆலய சித்திரை-வைகாசி மாத நிகழ்வுகள் - 2017

| | | |
|---|---|---|
| 06-04-2017 | வியாழன் | யோகர்சுவாமி குருபூசை |
| 12-04-2017 | புதன் | காரைக்காலம்மையார் குருபூசை |
| 14-04-2017 | வெள்ளி | ஏவிளம்பி புத்தாண்டுப்பிறப்பு |
| 20-04-2017 | வியாழன் | நடேசர் அபிசேகம் மாலை 6.00 மணிக்கு |
| 22-04-2017 | சனி | நாவுக்கரசர் குருபூசை |
| 10-05-2017 | புதன் | சித்ரா பௌர்ணமி |
| 20-05-2017 | சனி | முத்தோர் நிலைய கலைமாலை |




ஸ்ரீசிவகாமி சமேத சிதம்பரேஸ்வரர் பக்தர்களில் ஒரு குடும்பம் ஆலயத்திற்கு தேவையான சிருக்கு சிருவம் (ஹோமம் வளர்க்கும் போது நெய் விடும் உபகரணம்) ஒன்றைஆலய சிவாசாரியாரிடம் கையளிப்பதைக் காண்கிறோம்.

ஓம் நமசிவாய

**"நாம் யார்க்கும் குடியல்லோம்"**

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

**சைவ முன்னேற்றச் சங்கம் (UK)**

**Saiva Munnetta Sangam (UK)**

***“Community Service Through Saiva (Hindu) Concern”***

Salisbury Road, Manor Park, London E12 6AB.

Tel / Fax: 020 8514 4732 Fax: 01268 561805

www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com

Registered Charity No: 292085

அருள்மிகு சிதம்பரேஸ்வர ஆலயம்

கலசம் காலாண்டிதழ்

தோரணம் மாதாந்த மின்னிதழ்

## எமது சேவைகள்

நால்வர் முத்தோர் நியைம்

யோகா நிலையம்

சைவ சமயப் பரீட்சைகள்

கலை வகுப்புகள்

நால்வர் கோட்டம்

**அங்கதன் வரும்போது அவனியில் ஆர் துணை?**

**அவரவர் செய்த பாவ புண்ணியங்கள் மட்டுமே துணையாக வரும் .**

**அறவழி வாழ்ந்து தான தருமங்களை செய்து வாழ்வதுதான் நாம் சார்ந்த சைவ சமயத்தின் அடிப்படை!**

VIDYA DHANAM...

Enlightenment Circle

Saiva Munnetta Sangam

# Out Reach Projects - Sri Lanka – Feb'17


## Educational Materials Distributed to over 1,150 underprivileged children in Vanni

Yoga team has been honored to provide educational materials for the following schools from Vanni who requested for help to children in need.



Punnaineeravi G.T.M - Tharmapuram







Our sincere thanks to KM Foundation for their invaluable help on the ground in successfully carrying out this operation……




Puthumurippu Vigneswara Vidyalayam

உண்மையே பேசி நல்லவற்றையே செய்யுங்கள்

இறையருள் தானாகவே தங்களை வந்தடையும்





Selvanagar G.T.M






Sincere thanks to the yoga team for their support.



Special thanks go to the following people who provided support in helping these children in need.


**Mr. S Swaageen family**
**Mr. S Mohan Family**
**Mr K Mankaleswaran family**
**Miss S Rabindramohan**

| **SCHOOLS** | **CHILDREN** |
|---|---|
| KANNAKI-PURAM GTMS | 67 |
| IYANAPURAM GTMS | 295 |
| VANNEER-KULAM MV | 200 |
| ANAI-VILUNTHAN GTMS | 67 |
| PUNNAI-NEERAVI GTMS | 160 |
| PUTHU-MURIPPU VIGNESWARA | 170 |
| SELVANAGAR GTMS | 200 |






## யோகர்சுவாமிகளின் மாதாந்த நினைவு தினம் - 2017



யோகர் சுவாமிகளின் மாதாந்த நினைவு தினம் .எமது ஆலயத்தில் காலை 10-12மணிவரை பின்வரும் தினங்களில் நடைபெறும் என்பதை அவரது அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

02-04-2017 - ஞாயிறு காலை 10-12 மணிவரை

07-05-2017 - ஞாயிறு காலை 10-12 மணிவரை

அறத்தான் வருவதே இன்பம்
Virtue Gives True Delight


"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
Saiva Munnetta Sangam (UK)
"Community Service Through Saiva (Hindu) Concern"

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel: +44 (0)20 8514 4732
Registered Charity No: 292085
www.saivamunnettasangam.com E.mail: smsukinfo@gmail.com

1977 2017
சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
நாளைய கனவை நனவாக்கும் நாற்பது
The best preparation for tomorrow is doing our best today

# 40ல் திருமணங்கள் 40



## நாற்பதைக் கொண்டாட நல்லதொரு வழி

அன்புடையீர் வணக்கம். சங்கம் தனது நிறைவான சேவையில் நாற்பது ஆண்டுகளை எட்டியுள்ளது. இறையருளாலும் உங்கள் ஆதரவாலும் தொடரும் எங்கள் பணிகள் மேலும் சிறக்க நீங்கள் துணையிருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.



இந்த வளர்ச்சி எங்களை எமது பணிகளின் எல்லாத் துறைகளிலும் மேலும் ஆர்வத்துடன் ஈடுபட ஓர் உந்து சக்தியாகவும் அமைகின்றது. நாற்பது ஆண்டுகளின் நிறைவை பல வழிகளிலும் சிறப்பிக்க எண்ணியுள்ளோம். இதன் ஓர் அங்கமாக இலங்கையில் வறுமையின் காரணமாகத் திருமண வயதை அடைந்தும் மண வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாமல் திண்டாடும் நாற்பது மணமக்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் பாரியத் திட்டத்தை நாம் மேற்கொள்கிறோம். இந்த மனிதநேயப்பணியில் நீங்கள் இணைந்து நாற்பது திருமணங்களை நடத்தி அவர்களின் குடும்ப வாழ்வை ஆரம்பித்து வைக்க நல்லதொரு துணைசெய்து கொடுக்க வாருங்களென அன்புடன் அழைக்கின்றோம்.


### திருமணச் செலவு

| | |
|---|---|
| தாலி அரைப் பவுண் | ரூபா 25,000.00 |
| கூறைச் சேலை | ரூபா 10,000.00 |
| பட்டு வேட்டி சால்வை | ரூபா 5,000.00 |
| எழுத்து மோதிரங்கள் (2) | ரூபா 30,000.00 |
| திருமணச் செலவுக்கு | ரூபா 10,000.00 |
| வீட்டுப் பாவனைக் பொருட்களுக்கு | ரூபா 15,000.00 |

**நல்லது நடந்தால் ஆரவாரமின்றி அதை ஏற்றுக் கொள்ளுங்கள்!**

# London Warmly Welcomes
# Satguru Bodhinatha Veylanswami
## Guru Mahasannidham, Kauai Aadheenam
## 27th May to 4th June 2017





Satguru Bodhinatha Veylanswami is the 163rd preceptor of the holy Saivite lineage Kailasa Paramapara which has passed through enlightened souls including Sivaya Subramuniyaswami and Siva Yogaswami. He is the spiritual head of the international organisation Himalayan Academy and Publisher of the foremost international magazine Hinduism Today. London is truly blessed to welcome Satguru Bodhinatha Veylanswami, and you are invited to receive His dharsan at temples across London

www.himalayanacademy.com

| Date | Events |
|---|---|
| 27/05/17 | 08:30 – 12:30 Path to Siva Workshop (Part 1), Shree Ghanapathy Temple, 25-133 Effra Rd, Wimbledon, London SW19 8PU<br>18:30 – 21:30 Yogaswami Event, Highgate Hill Murugan Temple, 200A Archway Rd, Highgate, London N6 5BA |
| 28/05/17 | 08:30 – 12:30 Path to Siva Workshop (Part 2), Shree Ghanapathy Temple, 25-133 Effra Rd, Wimbledon, London SW19 8PU |
| 29/05/17 | 09:00 – 11:30 Children's Morning, Shree Ghanapathy Temple, 25-133 Effra Rd, Wimbledon, London SW19 8PU (parents and adults welcome) |
| 30/05/17 | 18:30 - 21:30 Shri Kanaga Thurkkai Amman Temple, 5 Chapel Rd, Ealing, London W13 9AE |
| 31/05/17 | 18:30 – 21:30 London Sri Murugan Temple, 78-90 Church Rd, East Ham, London E12 6AF |
| 01/06/17 | 08:30 -12:30 Opening Ceremony, Enfield Nagapooshani Ambaal Temple, 61–65 Church Ln, Edmonton, London N9 9PZ |
| 02/06/17 | 18:30 – 21:30 Saiva Munetta Sangham, 2 Salisbury Rd, Manor Park, London E12 6AB |
| 03/06/17 | 08:30 – 12:30 Oil Anointing Ceremony, Enfield Nagapooshani Ambaal Temple, 61–65 Church Ln, Edmonton, London N9 9PZ<br>18:30 - 21:30 London Sivan Kovil, 4A Clarendon Rise, London SE13 5ES |
| 04/06/17 | 08:30 – 12:30 Maha Kumbhabhishekam, Enfield Nagapooshani Ambaal Temple, 61–65 Church Ln, Edmonton, London N9 9PZ |

12 04 2017



## சிவமயம்

**நமசிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க**

Namasivaya vazga, Nathan thaal vazga

**The word Na-Ma-Si-Va-Ya is the panchakshara., five letters manthiram. Many saints have expressed the importance of this word. Yoga called, Pranayam purifies blood by inhaling air (oxygen) and improves the function of heart. Those who practice pranayam can inhale while saying slowly 'OM', control the breath by saying 'NAMA' and breath out by saying 'SIVAYA'. These words have to be said as slowly as possible without opening mouth. Lord is the Nathan, the head of all Gods, literally meaning the head or the husband of all souls, Jeevathma. Hence God is the Paramathma(**பசு பதி பாசம்)**Pasu = all living beings. Pathi = controlling Lord, pasam = the rope which connects jeevathma and paramathma. Krishna as a child was mischievous and his mother tied him with a rope. It doesn't mean that she didn't like him. Like that God loves us but ties when we yield to the franks of Maya. I f we overcomes Maya, Lord removes the the knot and permits jeevathma to merge with paramathma. This is the philosophy of Athvitham of Adishankara. Who is a man? Manu+than i.e., who is able to control the mind. The real swarupa of a man is not his body but his soul, athma. Athmam eva itham sarvam.**

**-Bagawan Sri Sathya Sai baba**

**When we have dharsanam, devoted view of elders, saints and God, first start with feet and slowly raise up your look to body and finaly the eyes and head. Hence M. Swamigal hails the name Namasivaya and starts glorifying Lords feet.**




**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை**
பற்றுக பறறு விடற்கு - திருக்குறள்

சிவாயமென்னும் அட்சரம் சிவனிருக்கும் அட்சரம்
உபாயம் என்று நம்புவோர்க்கு உண்மையான அட்சரம்
கபாடமிட்ட வாயிலை கடந்து போகும் வாயுவை
உபாயமிட்டு அழைக்குமே சிவாய ஐந்தெழுத்துமே
-சிவவாக்கியமர்

பெற்ற தாய்தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் தனை கலை மறந்தாலும்
கண்கண் நின்று இமைப்பது மறந்தாலும்
நல் தவத்தவர் உள் இருந்து ஓங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே -திருவருட்பா

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நான் அறி விச்சையும்
நமச்சிவாயவே நாவில் நன்று ஏத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே - அப்பர் தேவாரம்

# பெரிய புராணத் தொடர் விரிவுரை



கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கும் அடியேன்
நிறைகொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைகொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைகொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே – சுந்தரரின் திருத்தொண்டத் தொகை 8ம் பாடல்.

**அன்புடையீர்,**

**பெரிய புராணத் தொடர்ச் சொற்பொழிவு எமது ஆலயத்தில் 09.05.2016 அன்று இடம்பெற்ற ஆரம்ப விழாவைத் தொடர்ந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெற்று வருகின்றது. திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெருமைமிக்க சிவனடியார்களின் சிறப்பைச் சொல்லும் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு சென்ற ஆண்டுகளில் ஐந்து முறை இலண்டனில் ஆலயங்களில் இடம்பெற்று பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்தப் பக்திமிக்கத் திருப்பணியில் சிவனடியார்களின் பெருமைகளை எடுத்துச் சொல்லியும், கேட்டும் அருள் பெறுமாறு உங்களைப் பணிவாக அழைக்கின்றோம்.**

**வெள்ளிக்கிழமை மாலை 8.00 மணிக்கு ஆலயப் பூசையும் அதன்பின் இரவு 8.45 மணிமுதல் இச் சொற்பொழிவும் இடம்பெறும்.**

இடம்: சங்க அருள்மிகு நடராஜர் ஆலயம்
2 Salisbury Road Manor Park London E12 6AB

| | | |
|---|---|---|
| 14.04.2017<br>வெள்ளிக்கிழமை<br>உபயம்: திரு.திருமதி.<br>சிதம்பரப்பிள்ளை குடும்பம் | **கணம்புல்ல நாயனார்**<br>திருவிளக்கிடும் தொண்டைத் தலையாகக் கொண்டவர் பண்பாடு | திருமதி. தயாளினி மோகனராசா |
| 21.04.2017<br>வெள்ளிக்கிழமை<br>உபயம்: திரு.திருமதி.<br>குணரட்ணம் குடும்பம் | **காரி நாயனார்**<br>மூவேந்தரிடம் மெய்ப்பொருளைப் பாடிப்பெற்ற பொருளை சிவத்தொண்டில் செலவிட்டவரின் பண்பாடு | ப. வை. ஜெயபாலன் |
| 28.04.2017<br>வெள்ளிக்கிழமை<br>உபயம்: திரு.திருமதி.<br>ஆனந்ததியாகர் குடும்பம் | **நின்றசீர் நெடுமாற நாயனார்**<br>சம்பந்தப் பெருமானால் திருநீறு பூசப்பட்டு சைவநெறி காத்தவர் பண்பாடு | திரு. அருமைநாதர். சர்வநாதன் |
| 05.05.2017<br>வெள்ளிக்கிழமை<br>உபயம்: திரு.திருமதி.<br>ஜெகதீஸ்வரன் குடும்பம் | **வாயிலார் நாயனார்**<br>மனக் கோயிலில் அன்பெனும் அமுதளித்து அர்ச்சித்தவர் பண்பாடு | திரு. சிவ தணிகாசலம் |
| 12.05.2017<br>வெள்ளிக்கிழமை<br>உபயம்: திரு.திருமதி.<br>பிரேமதாசா குடும்பம் | **முனையடுவார் நாயனார்**<br>பகைமை வென்று பெற்ற நிதியம் எல்லாம் ஈசனடியார்க்கு ஈந்தவர் பண்பாடு | திருமதி. புவனேஸ்வரி சபாரட்ணம் |

ச. குகராஜா
கௌரவ சமயச் செயலாளர்

மா. இந்துசேகரன்
கௌரவ பொதுச் செயலாளர்

*குறிப்பு:*


| | | |
|---|---|---|
| *20.04.2017* | *வியாழக்கிழமை (மாலை)-* | *நடேசர் அபிஷேகம்* |
| *22.04.2017* | *சனிக்கிழமை-* | *திருநாவுக்கரசர் குருபூசை* |
| *10.05.2017* | *புதன்கிழமை-* | *சித்திரைப் பௌர்ணமி விரதம்* |


உ
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
**Saiva Munnetta Sangam (UK)**
**Registered Charity No: 292085**
Tel: 020 8514 4732 www.saivamunnettasangam.com email: smsukinfo@gmail.com

ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயம்
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.

# வாஸ்து சாந்திப் பூஜை

## 23.04.2017




அன்புள்ள அடியார்களுக்கு வணக்கம்.

அருள்மிகு சிதம்பரேஸ்வரர் ஆலய கட்டடப் பணிகள் தொடங்க இறைவன் திருவருள் கைகூடியுள்ள இவ்வேளையில் உங்கள் அனைவருக்கும் பிறக்கவுள்ள தமிழ்ப் புத்தாண்டை வரவேற்று நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறோம்.

ஆலயக் கட்டட வேலைகளின் முதற் கட்டமாக வாஸ்து சாந்திப் பூஜை எதிர்வரும் ஏவிளம்பி ஆண்டு சித்திரை மாதம் 10ம் நாள் **23.04.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30** மணிமுதல் நடைபெறவுள்ளது.

கணபதி ஹோமத்தைத் தொடர்ந்து காலை 8.00 மணிக்கும் – காலை 9.00 மணிக்கும் இடைப்பட்ட முகூர்த்தத்தில் வாஸ்து பூஜைக் கிரியைகள் இடம்பெறும்.

உங்களை இந்தப் புண்ணிய நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்து ஆலயப் பணிகள் நன்றே நிறைவேற ஊக்கமளிக்கும்படிப் பணிவுடன் அழைக்கின்றோம்.

வணக்கம்.

இப்படிக்கு
அன்புடன் சங்க ஆட்சிக் குழுவினர் 12.04.2017